Registered as a NewsPaper    பக்கங்கள் 4    விலை: ரூபா 5-00
Chundikuli Branch
Y.M.C.A.

ஈழநாதம்
THE EELANAATHAM    Peoples Daily    மக்கள் தினசரி
நாதம் 04    திருவள்ளுவர் ஆண்டு 2024    ஆடி 06    [21-07-1998]    புதன்கிழமை    ஓசை 153

## கஷ்டப் பிரதேச ஆசிரியர் வெற்றிடம் பட்டியல் சமர்ப்பிக்கப் பணிப்பு

வடகிழக்கு மாகாணத்திலுள்ள கஷ்டப் பிரதேசப் பாடசாலைகளில் நிலவும் ஆசிரியர்களுக்கான வெற்றிடங்கள் அந்தந்தப் பகுதிகளில் வசிக்கும் தகுதியானவர்களைக்கொண்டு உடனடியாக நிரப்பப்படவுள்ளன. இதற்குத் தகுதியானவர்களின் பட்டியலைத் தனக்குச் சமர்ப்பிக்குமாறு கொள்கைத் திட்டமிடல் அமுலாக்கல் அமைச்சின் செயலாளர் ஆர். பாஸ்கரலிங்கம் வடகிழக்கு மாகாண அரச அதிபர்களையும், வடகிழக்கு மாகாணசபையின் பிரதம செயலாளரையும் கேட்டுள்ளார். இதற்கென அமைச்சரவையின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்படும். தேசிய புனர்வாழ்வு நெறிப்படுத்தற் குழுக் கூட்டம் அண்மையில் திறைசேரி கேட்போர் கூடத்தில் அதன் செயலாளரான பாஸ்கரலிங்கம் தலைமையில் நடைபெற்றது. இக் கூட்டத்தில் கலந்து கொண்ட கிளிநொச்சி, மட்டக்களப்பு அரச அதிபர்கள் தமது ஆசிரியர்களுக்கான வெற்றிடம் [4 ஆம் பக்கம் பார்க்க]

# ஜெயலலிதா உடல்நிலை பாதிப்பு; 'குளுக்கோஸ்' ஏற்றுமாறு சிபார்சு!

## உண்ணாவிரதம் கைவிட மறுப்பு

[சென்னை]

கடந்த மூன்று தினங்களாக உண்ணாவிரதம் இருந்துவரும் தமிழக முதலமைச்சர் செல்வி ஜெயலலிதாவின் உடல் நிலை மோசமடைந்து வருவதினால் அவருக்கு "குளுக்கோஸ்" ஏற்றப்பட வேண்டும் என அவரைக் கவனித்து வரும் டாக்டர்கள் தெரிவித்துள்ளனர். இதற்கு முதலமைச்சர் மறுக்கும்பட்சத்தில் வலுக்கட்டாயமாக "குளுக்கோஸ்" ஏற்றப்பட வேண்டும் என மருத்துவர் தெரிவித்துள்ளனர்.

நேற்று மாலை வெளியிடப்பட்ட மருத்துவ குறிப்பு ஒன்று அவர் பலவீனமாகவும் அரை தூக்க நிலையிலும் இருப்பதாகவும் குறிப்பிட்டது ஜெயலலிதாவின் சிறுநீரில் அசிற்றோன் அதிகரித்துள்ளதாகவும், இரத்த அழுத்தம் குறைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

உண்ணாவிரதத்தை தொடர வேண்டாம் என்று மருத்துவர்கள் கூறியுள்ளபோதும் காவிரி நதிநீர் பிரச்சினைக்கு தீர்வு காணும்வரை—எத்தனை நாள் எடுத்தாலும் அதுவரை உண்ணாவிரதத்தை தொடரப்போவதாக முதல்வர் ஜெயலலிதா தெரிவித்தார்.

இதேவேளை உண்ணாவிரதமிருக்கும் ஜெயலலிதாவை நேற்றுக்காலை சந்தித்த தமிழக ஆளுனர் இப்பிரச்சினையைத் தீர்க்க குறிப்பிட்ட திட்டமொன்றை முன்வைத்ததாகவும் அதனை ஜெயலலிதா ஏற்றுக்கொள்ளவோ நிராகரிக்கவோ இல்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது.

ஜெயலலிதா விடுத்த அறிக்கை ஒன்றில் உணர்ச்சிவசப்பட்டு மறியல் போன்ற செயல்களில் ஈடுபடுவோர் உடன் அதை நிறுத்தவேண்டும் என்றும், (3ஆம் பக்கம் பார்க்க)

## நிலைமையை கையாள சுக்ளா சென்னை விஜயம்

(டில்லி)

ஜெயலலிதா உண்ணாவிரதம் இருப்பதால் தோன்றியுள்ள நிலைமையை தணிக்கும் முகமாக பிரதமர் நரசிம்மராவ் நீர்வள அமைச்சர் வி.சி. சுக்ளாவை சென்னைக்கும் பெங்களூருக்கும் சென்று வருமாறு பணித்துள்ளார்.

அமைச்சர் கர்நாடக முதலமைச்சரையும் தமிழக ஆளுநரையும் சந்திப்பார். தமிழக (3ஆம் பக்கம் பார்க்க)

## தீர்ப்பை கர்நாடக அமுல்படுத்தி விட்டது

கர்நாடக அரசு அறிவிப்பு

(சென்னை)

தமிழ் நாட்டிற்கு தண்ணீர் விடுவது தொடர்பான காவிரி நடுவர் மன்றத் தீர்ப்பை கர்நாடக அரசு அமுல்படுத்தி[...]

பட்டிருப்பதாகவும் மிகுதி வரும் வாரங்களில் விடப்பட்டு சரிசெய்யப்படும் என்றும் கர்நாடகஅரசு தெரிவித்துள்ளது. இது தொடர்பாக கர்நாடக[...]

## மட்டு. வாவியில் மீன் பிடிக்கத் தடை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு வாவியில் மீன்பிடிப்பதற்கு நேற்று முதல் சிறிலங்கா இராணுவம் தடைவிதித்துள்ளது இந்தத் தடையுத்தரவை மீனவர்களுக்கு தெரியப்படுத்துமாறு மட்டக்களப்பு மாவட்ட இணைப்பதிகாரி ரொஹான் குணவர்த்தன மாவட்ட கடற்றொழில் விரிவாக்க உத்தியோகத்தர் எஸ் ரி ஜோர்ஜுக்கு அறிவித்துள்ளார்.

ஏறாவூரிலிருந்து புதுக்குடியிருப்பு வரையான வாவி பிரதேசத்தில் 20 ஆம் திகதி காலை முதல் 26 ஆம் திகதி காலை வரை மேற்படி தடையுத்தரவு அமுலில் இருக்கும் எனவும் அக்காலப்பகுதியில் மீன் பிடிப்போர் பாதுகாப்பு படையினரால் கைது செய்யப்படுவர் எனவும் அவ் அதிகாரி தெரிவித்துள்ளார்.

## பணிப்பாளர் திட்டங்கள் வாரஇறுதியில் ஆராய்வு

[யாழ்ப்பாணம்]

வடக்கு - கிழக்கு மாகாண சபையால் புதிதாக நியமனம் செய்யப்பட்டுள்ள பிரதேசக் கல்விப் பணிப்பாளர்களின் வேலைத்திட்டங்கள் பற்றி எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை ஆராயப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

யாழ்ப்பாணத்தில் உள்ள பதினான்கு பிரதேச செயலர் பிரிவுகளில் பதின்மூன்று பிரிவுகளுக்கு பிரதேச கல்விப் பணிப்பாளர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். மற்றொரு பிரிவுக்கு விரைவில் ஒருவர் நியமனம் ஆகலாம் என்று தெரிவிக்கப்பட்டது. [தி]

## தோட்டப் பாடசாலை சேவையைச்சேர்க்க அனுமதி

தோட்டப்பாடசாலைகளில் சேவையாற்றி அரசாங்க சேவையில் சேர்ந்து ஓய்வு பெற்ற ஆசிரியர்களின் தோட்டப் பாடசாலைச் சேவைக் காலத்தையும் சேர்த்து இளைப்பாற்று ஊதியத்தினை வழங்க கல்வி அமைச்சு அனுமதி வழங்கியுள்ளது.

இதற்கு முன்னர் ஆசிரியர்கள் தோட்டப் பாடசாலைகளில் சேவையாற்றியசேவைக் காலம் ஏனைய பகுதிப் பாடசாலைகளில் சேவையாற்றிய சேவைக்காலத்துடன் சேர்க்கப்படவில்லை. அதற்கான இளைப்பாற்று ஊதியமும் வழங்கப்படவில்லை. ஆகவே மேற்படி புதிய நடைமுறையின்படி இரண்டு சேவைக் காலத்தையும் சேர்த்து இளைப்பாற்று ஊதியத்தினை வழங்க நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

இதற்கான விபரங்களையும், படிவங்களையும் யாழ். கல்வித் திணைக்கள ஓய்வூதியக் கிளையில் இம் மாதம் 26 ஆம் திகதி தொடக்கம் 30 ஆம் திகதி வரை பெற்றுக்கொள்ளலாம் என யாழ். கல்வித் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

## தற்காலிக ஊழியருக்கு நிரந்தர நியமனம்

## மோட்டார் ஊர்திகளின் உரிமையாளர் கவனத்திற்கு

உடுவில் / கோப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் உள்ள மோட்டார் ஊர்தி உரிமையாளர்கள் தங்களின் ஊர்திகளை கோண்டாவிலில் அமைந்துள்ள மோட்டார் ஊர்திப் பதிவுச் செயலகத்திற்கு எடுத்துச் சென்று பரிசோதனைக்குட் படுத்துமாறு மோட்டார் ஊர்திப் பதிவுப் பகுதியினர் கேட்டுக் கொள்கின்றனர்.

புலிகளின் தாக்குதலுக்கு அஞ்சி

## கடுகதி வேகத்தில் செல்லும் அமைச்சர்களின் கார்கள்

(கொழும்பு)

கொழும்பு நகர பிரதான வீதியில் தற்போது செல்லும் அமைச்சர்களது வாகன அணிகள் படுவேகமாக பயணமாவதாக பி.பி.ஸி. தெரிவித்துள்ளது. தாம் விடுதலைப் புலிகளது தாக்குதலுக்குஇலக்காகி விடுவோமா என்ற அச்சமே அவர்களது வாகனங்களின் இந்த கடுகதி வேகப்பயணத்திற்கு காரணம் என பி.பி.ஸி. கொழும்புச் செய்தியாளர் தெரிவித்தார்.

அமைச்சர்களின் இவ்வாகனங்களுடன் ஆயுதம் தரித்த (3 ஆம் பக்கம் பார்க்க)

## செயலகம் இடமாற்றம்

இதுவரை காலமும் புதிய செம்மணிவீதி, கல்வியங்காடு (கிருபாகரன் வீதி)இல் இயங்கி வந்த மேற்படி விசாரணைச் செயலகம், பொது மக்களின் போக்குவரத்து நன்மை கருதி (3 ஆம் பக்கம் பார்க்க)

# சீனாவிடம் 1000 கோடிரூபா ஆயுதம் கொள்வனவு!

(கொழும்பு)

கடந்த காலங்களில் சிறி[...]

கொள்வனவு செய்யப்பட[...]

கள் தோட்டப் பாடசாலைகளில் சேவையாற்றியசேவைக் காலம் ஏனைய பகுதிப் பாடசாலைகளில் சேவையாற்றிய சேவைக்காலத்துடன் சேர்க்கப்படவில்லை. அதற்கான இளைப்பாற்று ஊதியமும் ஒய்வூதியக் கிளையில் இம் மாதம் 26 ஆம் திகதி தொடக்கம் 30 ஆம் திகதி வரை பெற்றுக்கொள்ளலாம் என யாழ். கல்வித் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

## தற்காலிக ஊழியருக்கு நிரந்தர நியமனம்

[யாழ்ப்பாணம்]

அரச திணைக்களங்கள், காரியாலயங்களில் பணிபுரிந்து வரும் தற்காலிக ஊழியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கும் நடவடிக்கைகள் துரித கெதியில் இடம்பெற்று வருகின்றன.

இது சம்பந்தமான சுற்றறிக்கை ஒன்று வடக்கு-கிழக்கு மாகாண சபையால் யாழ். கல்வித் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

அமைய தற்காலிக, பதில் பணிப்பாளர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கல் மற்றும் சிற்றூழியர்களுக்கு, எழுதுனர் அதையொத்த தரங்களைச் சேர்ந்த அலுவலர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கல் சம்பந்தமாக அச் சுற்றறிக்கையில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த மாதம் முதலாம் திகதியஇச்சுற்றறிக்கையில் தற்காலிக ஊழியர்களுக்கான நிபந்தனைகளும் மேலதிக விபரங்களும் குறிப்பிடப்பட்டுள்ளன.

மேலதிக தகவல்கள் யாழ். கல்வித்திணைத்தில் பெற்றுக்கொள்ளலாம் என்று தெரிவிக்கப்பட்டது. [தி]

## வலி-வடக்கு பகுதியிலிருந்து 17 பேர் விடுவிக்கப்படுவர்

### அடுத்த வாரம் வருவர்

(யாழ்ப்பாணம்)

சிறிலங்கா இராணுவ நடவடிக்கையின் போது வலி-வடக்கு பகுதியில் சிக்கிக்கொண்ட 17பேர் அடுத்த வாரமளவில் விடுவிக்கப்படுவர் என சர்வதேச செஞ்சிலுவைச் சங்க வட்டாரங்கள் தெரிவித்தன.

சுமார் ஒருவருட காலமாக இராணுவப் பிடிக்குள் சிக்குண்டிருக்கும் இவர்களை விடுவிக்க கூட்டுப்படை தலைமை சம்மதித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இவர்கள் அடுத்தவாரம் குமணகப்பல் மூலம் பருத்தித்துறை வந்தடைவார்கள் எனவும் அவர்கள் அங்கு வைத்து உறவினர்களிடம் ஒப்படைக்கப்படுவர் எனவும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்க வட்டாரங்கள் தெரிவித்தன. (நி)

## தீர்ப்பை கர்நாடக அமுல்படுத்தி விட்டது

### கர்நாடக அரசு அறிவிப்பு

(சென்னை)

தமிழ் நாட்டிற்கு தண்ணீர் விடுவது தொடர்பான காவிரி நடுவர் மன்றத் தீர்ப்பை கர்நாடக அரசு அமுல்படுத்தியிருப்பதாக கர்நாடக அரசு கூறியுள்ளது.

இம் மாதம் 15 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஒன்றரை மாத காலத்தில் விட வேண்டிய 21 55 டி. எம். சி. அளவு தண்ணீருக்குப் பதிலாக 17.77 டி. எம். சி. தண்ணீர் விடப்பட்டிருப்பதாகவும் மிகுதி வரும் வாரங்களில் விடப்பட்டு சரிசெய்யப்படும் என்றும் கர்நாடகஅரசு தெரிவித்துள்ளது. இது தொடர்பாக கர்நாடக அரசு பெங்களூரில் வெளியிட்ட அறிக்கையில் மேலும் காவிரியில் தண்ணீர் திறந்து விடுவது ஆற்றுக்கு வரும் நீர்வரவைப் பொறுத்ததே ஆகும் என்றும் கர்நாடகவைப் பொறுத்தும் தண்ணீர் பஞ்சம் நிலவுவதாகவும் கூறியிருக்கிறது.

# சீனாவிடம் 1000 கோடிரூபா ஆயுதம் கொள்வனவு!

(கொழும்பு)

சிறிலங்கா அரசு ஆயிரம் கோடிரூபா பெறுமதியான ஆயுதங்களை சீனாவிடமிருந்து கொள்வனவு செய்யவுள்ளதாக பாதுகாப்பு வட்டாரங்களை மேற்கோள்காட்டி கொழும்பு பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

கடந்த காலங்களில் சிறிலங்காவால் கொள்வனவு செய்யப்பட்ட ஆயுத கொள்வனவில் பல கோடி ரூபா ஊழல் நிகழ்ந்திருப்பதாகவும் தரத்தில் குறைந்த ஆயுதங்கள் கூடிய விலைக்கு தரகர்கள் மூலம் வாங்கப்பட்டுள்ளதாக படை அதிகாரிகள் மத்தியில் முறுகல் நிலை காணப்பட்டது தெரிந்ததே.

இதைத் தொடர்ந்து தற்போது சீனாவிடமிருந்து கொள்வனவு செய்யப்பட இருப்பதாக கூறப்படும் ஆயிரம் கோடி ரூபாபெறுமதியான ஆயுத இறக்குமதியும் இவ்வாறான தரகர்கள் மூலமாகத் தான் இறக்குமதி செய்யப்பட இருந்தது. ஆனால் இந்த முடிவு கடைசி நேரத்தில் மாற்றப்பட்டு நேரடியாகவே சீன அரசிடமிருந்து பெற்று இறக்குமதி செய்ய முடிவாகி இருப்பதாக தெரியவருகிறது.

(3ஆம் பக்கம் பார்க்க)

# துணை ராணுவப் படையை தமிழகத்திற்கு அனுப்புக

### வாழப்பாடி கோரிக்கை

(சென்னை)

தமிழகத்தில் தொடர்ந்து மத்திய அரசு அலுவலகங்கள் ஆளும் கட்சியினரால் தாக்கப்பட்டால் அவற்றின் பாதுகாப்பிற்கு மத்திய துணை இராணுவப் படையை அனுப்புமாறு கோரப் போவதாக தமிழக காங்கிரஸ் தலைவர் வாழப்பாடி ராமமூர்த்தி எச்சரித்துள்ளார்.

தமிழக காங்கிரஸ் பிரமுகர்கள் இன்று பிரதமர் நரசிம்மராவை சந்தித்து முதலமைச்சரின் உண்ணாவிரதத்தால் எழுந்த மாநில சட்ட ஒழுங்கு சீர்குலைவு குறித்து பேசவுள்ளனர்.

(3ஆம் பக்சம் பார்க்க)

## இனப் பிரச்சினைக்கு தேசிய அரசின் மூலம் தீர்வுகாண முடியுமா?

### சிறிமாவோ கேள்வி

[கொழும்பு]

வடக்கு கிழக்கு பிரச்சினைக்கு தீர்வுகாண இந்த அரசு பாராளுமன்ற தெரிவுக் குழு ஒன்றை அமைத்தது. ஆனால் இதுவரை அக்குழுவினால் தொடரும் போரை முடிவுக்கு கொண்டு வரும் வரையில் சிபார்சு ஒன்றும் வழங்கப்பட வில்லை. இந் நிலையில் அரசின் புதிய தேசிய அரசுத்திட்டம் மூலம் பிரச்சினைக்கு எவ்வாறு தீர்வு காணப்படமுடியும்? இவ்வாறு கேட்டுள்ளார் சுதந்திரக் கட்சி

(3ஆம் பக்கம் பார்க்க)

## 1750 மெ. தொன் உணவுடன் குமண இன்று வரும்

### தபால்கள் குறித்து தகவல் இல்லை

(யாழ்ப்பாணம்)

'குமண' என்ற கப்பல் ஒரு தொகுதி அத்தியாவசியப் பொருள்களுடன் இன்று பருத்தித்துறை துறைமுகத்தை வந்தடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இக் கப்பலில் சுமார் 1000 மெற்றிக்தொன் அரிசி, 650 மெற்றிக்தொன் சீனி, 100 மெற்றிக்தொன் பருப்பு, 50 மெற்றிக்தொன் பயறு, ஆகிய பொருள்களும் மற்றும் யாழ். சுகாதார சேவைகள் திணைக்களத்துக்கு சுமார் 57 மெற்றிக் தொன் பொருள்களும், யாழ். போதனா மருத்துவமனைக்கு சுமார் 33 5 மெற்றிக்தொன் பொருள்களும் எடுத்துவரப் படுகின்றன. இக் கப்பல் இன்று துறைமுகத்தை வந்தடைந்தவுடன் பொருள்களை இறக்கும் பணிகள் ஆரம்பிக்கப் படும். இக் கப்பலில் தபால் பொதிகள் எடுத்துவரப்படுவதாக தகவல் எதுவும் கிடைக்கவில்லை.

# வடக்கு-கிழக்கு பிரச்சினை; உடன் தீர்வு காண்க!

வடக்கு-கிழக்கு பிரச்சினைக்கு உடனடியாக தீர்வு காண வேண்டும். தாமதித்தால் நிலைமை மோசமாகும் என நேற்று பாராளுமன்றத்தில் எதிரணி உறுப்பினர் அதாவுட செனிவிரட்ன தெரிவித்தார். அவசர காலச்சட்டம் நீடிப்பு மீதான விவாதத்தில் கலந்து கொண்டு பேசிய அவர் பேச்சு வார்த்தைகள் மூலமே தீர்வு காணப்படவேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

விவாதத்தில் கலந்து கொண்டு பேசிய வர்த்தக வாணிபத்துறை அமைச்சர் மன்சூர் வடக்கு கிழக்கு பிரச்சினை குறித்து பேசும் தமிழ் எம். பிகள் அங்கு செல்வதில்லை. யுத்தத்திற்காக அரசு பல மில்லியன்ரூபாவை செலவு செய்கிறது. இதைத் தாக்குப் பிடிக்க முடியாது என்றார்.

இராஜாங்க அமைச்சர்களான பி.பி. தேவராஜ், செல்லச்சாமி ஆகியோர் இனப் பிரச்சினை தீர்விற்கு தொண்டமானின் யோசனைகளே சிறந்தது என வலியுறுத்திப்பேசினார்கள்.

தமிழ் மக்களின் உரிமைகள் வழங்கப்படும்வரை இந்தப் போர் முடிவடையாது என்றார் வாசுதேவ நாணயக்கார.

# கட்சியில் மீள இணைக்க அனுரா கோரிக்கை

### 17 எம். பிக்கள் ஆதரவு

[கொழும்பு]

சிறிலங்கா சுதந்திரக்கட்சியில் இருந்து நீக்கப்பட்ட அனுரா பண்டாரநாயக்கா தமமை மீண்டும் கட்சியில் சேர்த்துக்கொள்ளுமாறு சிறிமாவோ பண்டாரநாயக்காவைக் கோரியுள்ளார். இத் தகவலை அனுராபண்டாரநாயக்காவின் பேச்சாளர் தெரிவித்தார்.

இதேவேளை கட்சியில் தனது செல்வாக்கை வெளிப்படுத்தும்முகமாக நேற்று முன்தினம் பண்டாரநாயக்கா சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் அனுரா கூட்டிய கூட்டமொன்றிற்கு 17பாராளுமன்ற உறுப்பினர்கள் சமுகம் கொடுத்துள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

அனுரா பண்டாரநாயக்கா தனது பலத்தைக் காட்டுவதற்காகவே இக் கூட்டத்தை கூட்டியதாகவும் இதேவேளை சிறிமாவோ பண்டாரநாயக்கா எடுத்த முடிவை 56 சுதந்திரக் கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் ஆதரவுதெரிவித்துள்ளதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

## வரி விளம்பரம்

### கொழும்பு ஸ்ரூடியோ

நினைவஞ்சலி. சரமகவிக்கு தேவையான (Blo ks பழைய படங்களில் இருந்து அந்தி யேட்டிக்குத் தேவையான புகைப்படங்கள், உறுதியான றபர்சீல்—ஸ்ரிக்கேஸ் தேவைப் படும்போது எம்முடன் தொடர்புகொள்ளுங்கள்: கொழும்பு ஸ்ரூடியோ 55 மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். (6962)

### சுவிற்சர்லாந்தில் கண்காட்சி

பழமை வாய்ந்த Wyler Invicta West-end Damas Rolex போன்ற தங்க நிறக் கடிகாரங்கள் சுவிற்சர்லாந்தில் கண்காட்சிக்கு அனுப்புவதற்காக நியாயமான விலைக்கு எம்மால் வாங்கப்படும். (பழுதடைந்த நிலையிலுள்ள கடிகாரங்களானாலும் சரி) டில்கா வாச் அன்ட் றேடியோ வேக்ஸ் 284, ஸ்ரான்லிவீதி, யாழ்ப்பாணம். [சி/7032)

### உடன் விற்பனைக்குண்டு

ஒருகிழமைவளர்ச்சியடைந்த புறொய்லர் குஞ்சுகள், சேவல் குஞ்சுகள் உடன் விற்பனைக்குண்டு. ''மல்லிகாபதி'' மானிப்பாய். (5421

### தவறிவிட்டது

19 7 93 அன்று இலுப்படி-திருநெல்வேலி சந்திக்குமிடையில் கைச்சங்கிலி ஒன்று தவறிவிட்டது கண்டெடுத்தவர்கள் தயவு செய்து ஈழநாதம் காரியாலயத்தில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும் (சி-7042)

### பரதநாட்டியம் அபிநயற்கல்வி

பரத நாட்டியத்தை ஒரு பாடமாகக் கற்கும் மாணவர்க்கேற்ப பலவருட அனுபவமிக்க ஆசிரியை திருமதி யசோதரா விவேகானந்தன் ஆசிரிய ஆலோசகர், அவர்களால் எழுதப் பெற்றது. சகல புத்தக சாலைகளிலும் கிடைக்கும் (5057)

### பிறந்த உடனேயே அடையாள அட்டை

(கொழும்பு)

குழந்தைகள் பிறந்த உடனேயே அவர்களது தேசிய அடையாள அட்டைக்கான இலக்கங்கள் வழங்கும் சாத்தியம் பற்றி ஆராய்வதாக

## இரண்டாம் ஆண்டு கண்ணீர் அஞ்சலி



பிறப்பு
22-12-1974

வீரச்சாவு
21-07-1991

### வீரவேங்கை லோலோ

(தில்லைநாதன் முரளீதரன்)

(சாள்ஸ் அன்ரனி சிறப்புப்படைப்பிரிவு)

ஆண்டு இரண்டு ஆனதடா ஆறவில்லை எம் துயரம்
மீண்டும் வந்து இந்த ஈழ
மண்ணில் பிறந்திடடா மாவீரா!

அன்றைய தினம் இவருடன் வீரச்சாவெய்திய போராளிகளுக்கும் எமது கண்ணீர் அஞ்சலிகள் 21-7 93 இன்று இவரது இல்லத்தில் நடைபெறும் மதிய போசன நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு போராளிகளையும் நண்பர்களையும் அன்புடன் அழைக்கின்றோம்.

உன்பிரிவால் ஏங்கும்
தில்லைநாதன் குடும்பத்தினர்.

ஏழாலை கிழக்கு,
ஏழாலை.

(5415)

## 2-ம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு: 21 — 07 — 1975



வீரச்சாவு: 21 — 7 — 1991

### வீரவேங்கை பிலிப்ஸ்

(செபஸ்ரியன் ரொக்சன்)

ஆனையிறவு தன்னில் ஆக்கிரமிப்பு படையை
அழித்த ஆண்டுகள் இன்று இரண்டு
ஆசைகள் அனைத்தையும் கொன்றாய்—நாம்
ஆண்டிட அடியெடுத்து வைத்தாய்.
பிரியமுடன் பிலிப்பாகினாய்
பிறந்ததற்கு புலியாகினாய்—இனி
பிறப்போர்க்கு வழிகோலினாய்—அடிமை

## நினைவு கூருகின்றோம்... 1993-07-21

1986ஆம் ஆண்டு இதே தினத்தில் திருமலை மூதூர்ப் பகுதியில் சிறிலங்காப்படையினரால் படுகொலை செய்யப்பட்ட 22 தமிழர்கள்

1988 ஆம் ஆண்டு கரவை நகரில் இந்தியப்படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின்போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய-

**லெப். மாமா/பாலையா** (சுப்பிரமணியம் பாலேந்திரம் - காட்டுப்புலம்-தொண்டமானாறு)

திருமலையில் சிங்களக் காடையர்களினால் படுகொலை செய்யப்பட்ட 03 தமிழர்கள்.

1989ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் இந்தியப்படையினரால் சுட்டுக்கொல்லப்பட்ட பிறவுண் வீதியைச் சேர்ந்த தமிழ்ப்பொதுமகன். மாவிட்டபுரத்தில் தேசவிரோதசக்திகளினால் சுட்டுக் கொல்லப்பட்ட ஊரெழுவைச் சேர்ந்த சிற்றூர்திச் சாரதியான தமிழ்ப் பொதுமகன்

1990 ஆம் ஆண்டு மன்னார் - மாந்தை பாப்பாமோட்டைப் பகுதியில் எதிர்பாராத விதமாக ஏற்பட்ட வாகன விபத்தில் எமைப்பிரிந்த-

**சரத்பாபு** (சபாரத்தினம் சிவகுமார் - 10 பெரியதம்பனை - மடுக்கோயில்)

மட்டு - கொக்கட்டிச்சோலைப் பகுதியில் சிறிலங்காப்படையினர் மேற்கொண்ட உலங்கு வானூர்தித் தாக்குதலில் கொல்லப்பட்ட 2 தமிழர்கள்

1991ஆம் ஆண்டு மணலாற்றில் முகாமிலிருந்து வெளியேறிய சிறிலங்கா இராணுவத்தினருடன் ஏற்பட்ட சமரின் போது வீரச்சாவெய்திய-

**லெப். பிரதாப்** (சண்முகம் முரளி- செங்கலடி - மட்டு)
**கப்டன் நியூட்டன்** (அந்தோனி செபமாலை - முதலைக்குத்தி, உயிலங்குளம் - மன்னார்)
**2 ம் லெப் செல்வம்** (செல்லையா சத்தியசீலன் - தாமரைக்குளம், அடம்பன் - மன்னார்)

ஆ. க. வெ நடவடிக்கையின் போது வெற்றிலைக்கேணியிலிருந்து புல்லாவெளி வரை முன்னேறிய சிறிலங்கா இராணுவச் சங்கிலித் தொடர்மீது தகர்த்தெறிந்து நுழைதற்தாக்குதலில் வீரச்சாவெய்திய-

**லெப். நளன்** (சச்சிதானந்தம் நிர்மலன் - பாண்டிருப்பு, கல்முனை - அம்பாறை)
**லெப். யோகன்** (கிட்ணர் உதயகுமார் - பெரியபுல்லுமலை - மட்டு)
**அல்வின்** (சிவபாலன் கருணாகரன் - ஆரையம்பதி 02- மட்டு)
**வேணு** (கந்தசாமி பிரபா - கல்லடி - மட்டு)
**ராஜபாரதி** (நாகலிங்கம் சிறிகலாதன் - ஆயித்தியமலை - மட்டு
**ஆரமுது** (விஜயகுமாரி தங்கவேல் - விளாவெட்டுவான் - மட்டு)
**லெப். இக்பால்** (நாகலிங்கம் கிருஷ்ணகுமார் - காந்தி நகர் - திருமலை)
**2-ம் லெப். எடிசன்** (முருகு குமார் - 3-ம் வட்டாரம், சாம்பல்தீவு - திருமலை)
**2-ம் லெப். நிர்மல்** (பீற்றர் ராஜ்குமார் - செல்வநாயகபுரம் - திருமலை)
**கில்பேட்** (யோசப் ஜொனி - அன்புவழிபுரம் - திருமலை)
**அன்புதாஸ்** (மாணிக்கம் துஷ்யந்தன் - கண்ணகிபுரம், உவர்மலை - திருமலை)
**அருள்ராஜ்** (சந்தசாமி கலையமுதன் - 5-ம் வாய்க்கால், பன்குளம் - திருமலை)
**லெப். கருணா** (நடராசா குகேந்திரன் - வெடிவைத்தகல், நெடுங்கேணி - மணலாறு)
**லெப். குணா** (வன்னியசிங்கம் புஸ்பராசா - புதுக்குடியிருப்பு - மணலாறு)
**அலெக்ஸ்** [முருகையா சந்திரகாந்தன் - புதுக்குடியிருப்பு - மணலாறு]
**கப்டன் தாஸன்** [பாலசுந்தரம் முரளிதரன்-தண்ணீரூற்று, முள்ளியவளை - முல்லைதீவு]
**லெப் காண்டி** [கனகரத்தினம் கனகேஸ்வரன் - தணுக்காய், மாங்குளம் - முல்லைத்தீவு]
**மேஜர் சிவசங்கர்** [யோசப் ஜெயமணி - கோதண்டர், நொச்சிக்குளம் - வவுனியா]
**கப்டன் விஷ்ணு** [யோசப் செல்லையா தியாகு - செட்டிக்குளம்வீதி, பெரியகட்டு - வவுனியா]
**சந்திரா** [மல்லிகா பொன்ராசா - மகிழம்பைக்குளம்

## 2-ம் ஆண்டு நினைவஞ்சலி



### லெப். குணேஸ்

**(செல்வராஜா பேரின்பமோகன்/ஆதவன்)**

(4-ம் வட்டாரம் புங்குடுதீவு)

ஆதவன் உதித்தது: 15. 11. 1969 ஆதவன் மறைந்தது: 14. 07. 1991

திதி:- 21. 07. 1993


ஐயா, ஆதவனே ஆண்டிரண்டோ உனைப்பிரிந்து
மெய்யாக நம் நெஞ்சு வேகுதையா - பொய்யான
வாழ்வை வளம்படுத்தி மண்ணுக்காய் வாழ்ந்தவனே
மாளுமோ உன் எண்ணம் மனத்தில்.

குடும்பத்தினர்
நண்பர்கள்

செம்மணி ஒழுங்கை,
அரியாலை.

(சி-7039)

## 2-ம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு
16-11-1969

வீரச்சாவு
21-7-1991

...ஜலோசகா, அவர்களால் எழு
...ப் பெற்றது. சகல புத்தக
...சாலைகளிலும் கிடைக்கும்
(5057)

## பிறந்த உடனேயே அடையாள அட்டை

(கொழும்பு)

குழந்தைசள் பிறந்த உட
னேயே அவர்களது தேசிய
அடையாள அடடைக்கான
இலக்கங்கள் வழங்கும் சாத்
தியம் பற்றி ஆராய்வதாக
ஆட் பதிவுத் திணைக்
களத்தின் புதிய தலைவர்
...மரவீர கூறியுள்ளார்.
எனினும் இது இன்னும்
...லே சனையிலேயே இருப்ப
தாகக் குறிப்பிட்ட அவர்
மேலும் கூறுகையில் குழந்தை
... பிறந்தவுடன் வழங்கப்
படும் பிறப்பு சாட்சிப் பத்தி
ரத்திலேயே அவர்களது அடை
யாள அட்டைக்கான இலக்
கம் ஒதுக்கப்பட்டு வழங்கப்
படலாம் எனவும் குறிப்பிட்
டார்.

## ஆடிப்பூரம்

பொன்னாலை ஸ்ரீ வரத
ராஜ பெருமாள் ஆலயத்தில்
...திர்வரும் வெள்ளிக்கிழமை
ஆடிப்பூர விழா நடைபெற
...ள்ளது. அன்றைதினம் காலை
...காபிஷேகமும்ப ஹாலட்சுமி
...பிஷேகமும் நடைபெறும்.
...த்துடன் ஆடிப்பூரப் பொங்
...லும் நடைபெறவுள்ளது.

---

எழுதுமட்டுவாழ்
...விழுபளை கண்ணகை
அம்பாள் ஆலய

## வருடாந்த மகோற்சவம்

மேற்படி ஆலய வருடாந்த
மகோற்சவம் இம்மாதம்
...4-07-93 சனிக்கிழமை
கொடியேற்றத்துடன் ஆரம்
பமாகிறது. மகோற்சவம்
இனிது நடைபெற சுமுக
...லையை ஏற்படுத்தித்தந்த
தமிழீழ காவல்துறையின்
ஆலய நிர்வாகப் பிரிவிற்கு
எமது மனமார்ந்த நன்றி
...றிகலைத் தெரிவித்துக்
கொள்கிறோம்.

நன்றி

இங்ஙனம்
ஆலய பரிபாலன
சபையும்
தர்மகர்த்தாவும்

(...-7047)

---

## வீரவேங்கை பிலிப்ஸ்

(செபஸ்ரியன் ரொக்சன்)

ஆனையிறவு தன்னில் ஆக்கிரமிப்பு படையை
அழித்த ஆண்டுகள் இன்று இரண்டு
ஆசைகள் அனைத்தையும் கொன்றாய்—நாம்
ஆண்டிட அடியெடுத்து வைத்தாய்.
பிரியமுடன் பிலிப்பாகினாய்
பிறந்ததற்கு புலியாகினாய்—இனி
பிறப்போர்க்கு வழிகோலினாய்—அடிமை
பிணை அறுத்து மக்கள் துணையாகினாய்


7. தொடர்மாடி,
குருநகர்.

—குடும்பத்தினர்

(5417)

---

## 2-ம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு:
22. 08. 1978

வீரச்சாவு:
21. 07. 1991

## வீரவேங்கை நிசாந்தன்

(இராசதுரை நந்தகுமார்)

பாசத்தின் கொழுந்தே - நந்தா
எமைப் பிரிந்து சென்றாயோ!
சீர்குலைந்த தமிழன் வாழ்வைச்
சீராக்கச் சீற்றமுடன் எழுந்தவனே!
குடும்ப சுமை விடுத்து
இனத்தின் சுமை சுமந்தவனே!
சீராட்டி வளர்த்த எம்மை
எங்களினம் பாராட்டச் செய்தவனே!
உந்தன் நினைவுகள் என்றும்
நினையாத நினைவுகள் ஆனதடா!
உன்தன் உயிர்த்துடிப்புள்ள
மலரும் முகம் கண்ட நாம்
இந்த இரு ஆண்டுகள்
உன் பிரிவால் தவிக்கின்றோம்
எத்தனை யுகங்கள் ஆனாலும்
உன் நினைவுகள் - எம்
நெஞ்சமதை விட்டகலா.

இவருடன் வீரச்சாவைத் தழுவிக்கொண்ட ஏனைய போராளிகளையும் இந்நாளில் நினைவு கூருகிறோம்.

உரும்பராய் கிழக்கு,
உரும்பராய். (இ)

குடும்பத்தார், உற்றார்,
உறவினர், நண்பர்கள்.

---

...பன்குளம் - திருமலை)
**லெப். கருணா** (நடராசா குகேந்திரன் - வெடிவைத்த கல், நெடுங்கேணி - மணலாறு)
**லெப். குணா** (வன்னியசிங்கம் புஸ்பராசா - புதுக்குடியிருப்பு - மணலாறு)
**அலெக்ஸ்** [முருகையா சந்திரகாந்தன் - புதுக்குடியிருப்பு - மணலாறு]
**கப்டன் தாஸன்** [பாலசுந்தரம் முரளிதரன் - தண்ணீரூற்று, முள்ளியவளை - முல்லைத்தீவு]
**லெப் காண்டி** [கனகரத்தினம் கனகேஸ்வரன் - தணுக்காய், மாங்குளம் - முல்லைத்தீவு]
**மேஜர் சிவசங்கர்** [யோசப் ஜெயமணி - கோதண்டர், நொச்சிக்குளம் - வவுனியா]
**கப்டன் விஷ்ணு** [யோசப் செல்லையா தியாகு - செட்டிக்குளம்வீதி, பெரியகட்டு - வவுனியா]
**சந்திரா** [மல்லிகா பொன்ராசா - மகிழம்பைக்குளம் - வவுனியா]
**நசார்** [பியதாச ரவி - மன்னார்வீதி, செட்டிக்குளம் - வவுனியா
**கபூர்** [தங்கவேல் நடேசன் - 155ஆம் கட்டை, பாரதிபுரம் - கிளிநொச்சி]
**டொமினிக்** [அருள் ஆனந்தராசா - 104/3 திருவையாறு - கிளிநொச்சி]
**மேஜர் சேரன்** [சண்முகம் றோய் செழியன் - ராகம - கொழும்பு]
**மேஜர் கோணேஷ்** [மார்கண்டு தாமோதரம்பிள்ளை புத்தூர் மேற்கு - யாழ்]
**கப்டன் பில்லா** [கிருஷ்ணபிள்ளை சிவஞானம் - உடுத்துறை - தாளையடி]
**லெப். இளஞ்செழியன்/வாஞ்சி** [மு. வே. யோகேஸ்வரன் அரவிந்தன் - மயிலியதனை, தொண்டமானாறு மேற்கு]
**லெப். வாசன்** [சிங்கராசா பிலிப்-நிக்சன் -குருநகர்-யாழ்]
**2-ம் லெப். கந்தன்** [அன்ரன் ஜேசுதாஸ் அன்ரன் மரியதாஸ் - 3ஆம் குறுக்குத்தெரு - பருத்தித்துறை]
**2-ம் லெப். தேவா** [அற்புதநாதன் குகதாஸ்-குப்பிளான், ஏழாலை - யாழ்]
**2 ம் லெப். குயிலன்** [துரைராஜா ரசிகரன் - கொம்மாந்துறை - வல்வெட்டித்துறை]
**சந்திரநாயகி** [சிவமலர் வடிவேலு - கிளாலி, எழுதுமட்டுவாள் - பளை]
**அயுர்தன்** [பொன்னுத்துரை மோகரன் - நாவற்குழி தெற்கு, கைதடி - யாழ்]
**வரன்** [சரவணமுத்து ரவிச்சந்திரன் - மானிப்பாய்வீதி, கோணாந்தோட்டம் - யாழ்]
**சிவா** [சிவராசா ஜெகதீஸ்வரன் பொற்கலன்தம்பை, தெல்லிப்பழை - யாழ்]
**சுடரோன்** [நடராசா ஜெகதீஸ்வரன் - அருகம்பனை, கீரிமலை - யாழ்]
**ஆனந்த்** [கிருஷ்ணபிள்ளை தவராசா - கரவெட்டி கிழக்கு - யாழ்]
**பிலிப்ஸ்** [செபஸ்ரியன் ரொக்சன் - 6/7, தொடர்மாடி, குருநகர் - யாழ்]
**ஆனந்தன்** [நேசா அமலதாஸ் - 26, றக்காவீதி, சுண்டுக்குளி - யாழ்]
**முரளி** (மகாலிங்கம் தவக்குமார் - 5ஆம் வட்டாரம், நெடுந்தீவு மேற்கு - யாழ்)
**குசோக்/கிசோக்** (தியாகராசா கிருபாகரன் - மாவிட்டபுரம் தெல்லிப்பழை - யாழ்)
**ரசிந்தன்** (வெற்றிவேல் வரதராசா - கிளாலை, தெல்லிப்பழை - யாழ்)
**லோவோ** (தில்லைநாதன் முரளிதரன் - புன்னாலைக்கட்டுவன், சுன்னாகம் - யாழ்)
**முரளி** (இராசதுரை தர்மசீலன் - சுழிபுரம் மேற்கு-யாழ்)
**பில்லா** (குருகன் முத்தையா நந்தபாலன் - செல்வபுரம், உரும்பராய் தெற்கு - யாழ்)
**நளினி** (மேகலா இரத்தினராசா - பலாலி வீதி, உரும்பராய் வடக்கு - யாழ்)
**நிசாந்தன்** (இராசதுரை நந்தகுமார் ஞானவைரவர்வீதி, உரும்பராய் கிழக்கு - யாழ்)
**கபிலன்** (மார்க்கண்டு குகமூர்த்தி - நவாலி தெற்கு, மானிப்பாய் - யாழ்)
**ரவி** (கனகசபை ரவீந்திரன் - புத்தூர் கிழக்கு - யாழ்)
**றெஜி** (பற்குணராசா செந்தூரன் - டச்சுவீதி, மானிப்பாய் - யாழ்)
**அன்ரனி** (வல்லிபுரம் பிரதாபன் - புதிய செம்மணிவீதி, ஆனந்தபுரம், கல்வியங்காடு - யாழ்)

மட்டு - தாண்டவன் வெளியில் எதிர்பாராதவிதமாக பொறிவெடியில் சிக்கியதில் எமைப்பிரிந்த-
**புனிதன்** (லியோ புனிதராஜ் - பாரதி ஒழுங்கை - மட்டு)

மட்டுநகரில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட நடவடிக்கைகளின் போது படுகொலைசெய்யப்பட்ட சித்தாண்டியைச் சேர்ந்த தமிழ் விவசாயி.

1992ஆம் ஆண்டு மட்டு மாவட்டத்தில் மாரடைப்பு நோய் காரணமாக எமைப்பிரிந்த-
**சபாபதி/தயாநிதி** (சின்னத்தம்பி குகேந்திரன் - கிரான்-மட்டு)

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.

## தமிழீழ விடுதலைப்புலிகள்.

(சி-7041)

---



பிறப்பு
16-11-1969

வீரச்சாவு
21-7-1991

## மேஜர் சேரன்

(றோய் செழியன் சண்முகம்)

சேரனே ...... !
மாவீரனே ... ... !
உன் இழப்பு
ஈடு செய்ய முடியாதது தான்.
இருந்தும் ... ... தளரவில்லை
ஏனென்றால் ... ... ...
நீ சுமந்த கனவுகளை
நனவாக்கும் தன் பணியில்
நீ சுமந்த துப்பாக்கி - இன்றும்
கனமாக இயங்குவதால்
இறுதிவரை உன் வழியில்
உறுதியுடன் நாம் செல்வோம்.

தவம் அண்ணா குடும்பம்.

சாவகச்சேரி.

(5416)

சிந்தனைக்கு

நிமிர்ந்த முதுகெலும்பு இல்லாதவரையில் நினைத்தது நிறைவேறுமென கவை எலும்பைத் தொட்டு நம்புவதில் பயனில்லை.

- வில் ஹென்ரி

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 21-07-1993
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2023
த. பெ. எண்-05

# தமிழக அரசியலில் மற்றொரு 'ஸ்ரண்ட்'

'ஸ்ரண்ட்' நடிகர்களால் நிரம்பி வழியும் கோடம்பாக்கம் போன்று தமிழ்நாடு 'ஸ்ரண்ட் அரசியல்' வாதிகளினாலும் நிரம்பி வழிகின்றது. தமிழ் சினிமாக்களைப் பார்த்து அதில் வரும் ஸ்ரண்டுகளே நிஜவாழ்க்கை என நம்பும் தமிழக மக்களும் அரசியல்வாதிகளின் ஸ்ரண்டுகளை நிஜமென நம்புவதில் புதுமை ஒன்றுமில்லை.

இவ்வாறான நிலையில், தமிழக முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா காவிரி நீர் பிரச்சினை தொடர்பாகஎடுத்துள்ள காலவரையறையற்ற உண்ணாவிரதம் என்னும்'ஸ்ரண்ட்' தமிழகத்தில் பெரும் பதற்ற நிலையை உருவாக்கும் என்பதில் ஆச்சரியம் எதுவுமில்லை. ஆனால், ஸ்ரண்டிலுள்ள ஒரே ஒரு வேறுபாடு, செல்வி ஜெயலலிதா நடிகையாக இருக்கும் வரை அவருக்காகப் பல நடிகைகள் 'டூப்' போட்டு 'ஸ்ரண்ட்' செய்துள்ளார்கள். ஆனால், இதில் ஜெயலலிதாவே நேரடியாக 'ஸ்ரண்ட்' போடவேண்டி வந்துள்ளது.

நடுவர் மன்ற தீர்ப்பிற்கு இணங்க காவிரி நீரை திறந்துவிடும்வரைகாலவரையறையற்ற உண்ணாவிரதம் என்றஜெயலலிதாவின் திடீர் அறிவிப்பானது, சரிந்துவரும் தனது அரசியற் செல்வாக்கை மீண்டும் நிலை நிறுத்துவதற்கான ஒரு நடவடிக்கை என்ற எதிர்க்கட்சிகளினதும், அரசியல் விமர்சகர்களினதும் கருத்து ஏற்றுக்கொள்ளக் கூடியதே. இது உண்மையும் கூட.

ஆனால், தனது சரிந்த 'இமேஜ்'ஜை நிலை நிறுத்துவதற்கு ஜெயலலிதா தெரிவு செய்த விடயமும், நேரமும் மிகவும் முக்கியமானதும், பொருத்தமானதும் ஆகும். தமிழர்களைப் பொறுத்து தற்பொழுது பெரும் தண்ணீர்த் தட்டுப்பாடு நிலவும் காலகட்டமாகும். குடிநீருக்கே மக்கள் ஆலாய்ப் பறக்கும் இவ்வேளையில், தமிழகத்திற்கு வழங்கப்பட வேண்டிய தண்ணீரைத் 'தா' எனக் கோரி முதலமைச்சர் ஒருவர் உண்ணாவிரதம் இருப்பது நியாயமானதும் அர்த்தம் உள்ளதும் என்றே மக்கள் நம்புவர். இதனை அரசியல் ஸ்ரண்ட் என முற்றுமுழுதாகத் தூக்கி எறிந்துவிட மாட்டார்கள்.

பாடசாலை அனுமதி

## மேலதிக பண அறவீடு; மாணவர் பகிஷ்கரிப்பு

[கொழும்பு]

பாடசாலை அனுமதியின் போது மேலதிகமாகப் பணம் வசூலிப்பதை ஆட்சேபித்து பெல்மதுள மத்திய கல்லூரி மாணவர்வகுப்புக்களை பகிஷ்கரித்து வருகின்றனர். அத்துடன் பரீட்சைக்கட்டணம் என்ற பெயரில் பெருந்தொகைப் பணம் பெறுவதையும் அவர்கள் ஆட்சேபித்துள்ளனர்.

பகிஷ்கரிப்பில் ஈடுபட்டுள்ள மாணவர்களைக் கல்லூரி வளாகத்துக்குள் நுழைய நிர்வாகம் அனுமதிக்காததைத் தொடர்ந்து, மாணவர்கள் வளாகத்துக்கு வெளியே நின்று ஆர்ப்பாட்டம் செய்து வருகின்றனர்.

## மனித உரிமைகள் குழு கொழும்பு விஜயம்

[கொழும்பு]

சிறிலங்காவில் அரசு பத்திரிகைச் சுதந்திரத்தை கட்டுப்படுத்த முனைகிறது எனஎழுப்பப்படும் குற்றச்சாட்டுக்கள் உண்மையானவையா என்பது பற்றி ஆராய லண்டனில் உள்ள மனித உரிமைகள் காப்பு அமைப்பு பிரதிநிதிகள் கொழும்பு வந்துள்ளனர்.

கடந்த ஓராண்டு காலத்திற்குள் அரச கட்டுப்பாட்டிற்குள் இல்லாத செய்தித்தாள்களின் பத்திரிகையாளர்கள் பலர் தாக்கப்பட்டும் தூற்றப்பட்டும் இருப்பதாக கருத்துச் சுதந்திரம்மற்றும் பத்திரிகைத் தணிக்கை ஆகியவற்றைக் கண்காணிக்கும் மேற்படி அமைப்பு தெரிவித்துள்ளது.

அரசிற்கு எதிரான செய்திகளை வெளியிடும் செய்தித்தாள்கள் செயல்படும் முறையிலும் அரச அதிகாரிகள் தலையிட முயற்சிப்பதாக எழுப்பப்பட்டு வரும் குற்றச்சாட்டுக்களையும் மேற்படி அமைப்பு பரிசீலனை செய்யவுள்ளது இக்குழு அடுத்த இருவாரங்களிலும்பத்திரிகைச் சுதந்திரத்தின்நிலைமைபற்றிக் கலந்துரையாடுவதற்காக அரச அதிகாரிகளையும் ஏனைய குழுக்களையும் சந்திக்கவுள்ளது.

## மன்னார்-கற்பிட்டி சேவை பாகிஸ்தானிடம் உதவி?

மன்னாருக்கும் கற்பிட்டிக்கும் இடையே சேவையில் ஈடுபடுத்துவதற்கான கப்பல் ஒன்றைப்பெறும்பொருட்டு பாகிஸ்தான் அரசின் உதவி நாடப்பட்டு இருப்பதாக அமைச்சர் அஸ்வர் கூறியுள்ளார்.

கொழும்பிலுள்ள பாகிஸ்தான் தூதுவருடன் இது தொடர்பாக பேச்சு நடத்திய அமைச்சர் அஸ்வர் கற்பிட்டியிலிருக்கும் முஸ்லிம் அகதிகள்மன்னார்போய்வரபோதிய போக்குவரத்து வசதிகள் இல்லாமலிருப்பது குறித்து சுட்டிக்காட்டி நவீன வசதிகளுடன் கூடிய கப்பலொன்றைப் பெற உதவுமாறு கோரியுள்ளார்.

## தமிழர் பதிவு நடவடிக்கை மலையகத்திற்கும் விரிவு

மலையக நகரங்களிலும், மத்திய மாகாண நகரங்களிலும், கிராமங்களிலும் வாழும் தமிழர்களின் இல்லங்களில் நிரந்தரமாகவும், தற்காலிகமாகவும் தங்கியிருப்போர் அவ்வப்பிரதேச பொலிஸ் நிலையங்களில் அல்லது கிராம சேவகர் பிரிவுகளில் பதிவு செய்து கொள்ளுமாறு பொலிஸார் மீண்டும் அறிவுறுத்தியுள்ளனர்.

மேலும் வவுனியா, மாங்குளம் பகுதிகளில் பயிற்சி பெற்ற இருவர் கண்டிப் பிரதேசத்தில் உலாவுவதாகவும், இந்தியாவில் பயிற்சி பெற்ற ஒருவர் கண்டிப் பிரதேசத்திலிருந்து நழுவிவிட்டதாகவும் பொலிசார் கூறியுள்ளனர்.

## பிரசவத்தின் போது சிசு மரணம் அதிகரிப்பு

உலகில் இன்று ஒவ்வொரு வினாடியிலும், ஒரு கர்ப்பிணித் தாய் குழந்தைப் பிரசவத்தின் போது இறந்து கொண்டிருக்கின்றார். இவ்வாறு இரத்தினபுரி மாநகர மண்டபத்தில் நடைபெற்ற கர்ப்பிணித் தாய்மாரின் மாதர் நோய் மற்றும் மகப்பேறு தொடர்பான இரு நாள் சுகாதாரக் [illegible] பேசிய சிங்கப்பூரைச் சேர்ந்த ஆசிய பசுபிக் பிராந்திய மாதர் நோய் மகப்பேற்று வைத்திய நிபுணர் சங்கத்தின் பொதுச் செயலாளரான பேராசிரியர் எஸ் எஸ் ரட்ணம் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் கூறுகையில், 1985-ம் வருடத் [illegible]

# கட்சியில்ஜனநாயகம் ஏற்பட தொடர்ந்து போராடுவேன்

## அனுரா தெரிவிப்பு

(கொழும்பு)

''கட்சிக்குள்ஜனநாயகத்தை நிலைநாட்டுவதற்காக நான் நடத்திய போராட்டம் கட்சியிலிருந்து நான் இடைநிறுத்தம் செய்யப்படும் நிலைக்கு இட்டுச் சென்றிருக்கிறது. எனினும் எனது போராட்டத்தைத் தொடர்ந்து நடத்துவேன்''

இவ்வாறு அனுரா பண்டாரநாயக்கா தமது இல்லத்தின் முன்பாகக் கூடிய ஆதரவாளர்கள் மத்தியில் பேசும் போது தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் கூறுகையில், சதி நாசவேலைகளின் ஊடாகவே நான் இன்று கட்சியில் இருந்து இடைநிறுத்தம் செய்யப்பட்டிருக்கிறேன். எங்களது கட்சிக்குள் மீண்டும் ஜனநாயகத்தை நிலைநாட்டவும், கட்சியை மீண்டும் அதிகாரத்திற்குக் கொண்டு வரவும் பாடுபட்டேன். சகலவிதமான சர்வாதிகாரக் கட்டுப்பாடுகளில் இருந்தும், விடுபட்ட சுதந்திரமான ஜனநாயகக் கோட்பாடுகளைக் கொண்ட சமுதாயத்தை உருவாக்குவதற்கான போராட்டத்தை மக்களின் ஆதரவுடன் தொடர்ந்து முன்னெடுப்பேன் எனவும் சூளுரைத்தார்.

## பிரிட்டிஷ் தூதுவராக சிறில் ரணதுங்க?

(கொழும்பு)

அவுஸ்திரேலியாவிற்கான சிறிலங்கா தூதுவராக அண்மையில் நியமிக்கப்பட்ட ஜெனரல் சிறில் ரணதுங்க பிரிட்டிஷ் தூதுவராக நியமிக்கப்படலாம் என ரைம்ஸ் பத்திரிகை தெரிவித்துள்ளது. இதேசமயம் அவுஸ்திரேலிய தூதுவராக மீண்டும் ஒருமுறை ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியை சேர்ந்த டாக்டர் விக்ரமவீரசூரிய நியமிக்கப்படவுள்ளார். ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி தற்போது ஐ. தே. கவுடன் உறவு நிலையை கொண்டுள்ளதையே இது காட்டுவதாக தெரிவிக்கப்படுகிறது.

பிரிட்டிஷ் தூதுவர் ஜெனரல் சேபால ஆட்டிகல அப்பதவியைவிட்டு நாடு திரும்பியதையடுத்து புதிய பிரிட்டனுக்கான சிறிலங்கா தூதுவராக பலரின் பெயர் அடிபட்டது தெரிந்ததே.

### வலைபந்தாட்ட போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ், மாவட்ட பாடசாலைகளுக்கிடையேயான வலைபந்தாட்ட சுற்றுப்போட்டியின் அரையிறுதிப் போட்டிகள் இன்று சுண்டிக்குளி மகளிர் கல்லூரி மைதானத்திலும், வேம்படி மகளிர் கல்லூரி மைதானத்திலும் பிற்பகல் மூன்று மணிக்கு ஆரம்பமாகவுள்ளன.

### நிலைமையை

முதல்வர் பேசும் நிலையில் இருந்தால் சுக்லா அவருடனும் பேச்சு நடத்துவார். அமைச்சர் சுக்லா பிரதமர் ராவுடன் முன்னதாக பேச்சு நடத்திவிட்டு விசேட விமானம் மூலம் புறப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

### ஜெயலலிதா

தமிழக மக்கள் அமைதிகாக்க வேண்டும் என்றும் வேண்டுகோள் விடுத்தார்.

அத்துடன் மக்களுக்கு ஏற்பட்டுள்ள இடையூறுகள் தொடர்பாக தான் வருந்துவதாகவும், இத்தகைய இடையூறுகள் ஏற்படாமல் பார்த்துக்கொள்ளவேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

### சீனாவிடம்

இதேவேளை முப்படையினரதும், பொலிசாரினதும் பாவனைக்கென கடந்த 5 வருட காலத்திற்குள் பத்தாயிரம் கோடிக்கும் அதிகமான பெறுமதி வாய்ந்த இராணுவ தளபாடங்கள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன.

இக் கொள்வனவில் குண்டு வீச்சு விமானங்கள், ஹெலிகொப்டர்கள், தாங்கிகள், கப்பல்கள், பீரங்கிகள், படகுகள், ரொக்கட்வெடிகள், ஆயுதங்கள், தோட்டாக்கள், தொலைத்தொடர்பு சாதனங்கள் ஆகியன அடங்குகின்றன.

இவ்வாறான ஆயுதங்கள் சீனா, பிரிட்டன், இஸ்ரவேல், யூகோஸ்லாவியா, செக்கோஸ்லோவாகியா போன்ற நாடுகளில் இருந்தே கொள்வனவு செய்யப்பட்டுள்ளன.

அண்மையில் ஆயுத இறக்குமதி வரிசையில் கடைசியாக கொள்வனவு செய்யப்பட்ட சுப்பர்சொனிக் குண்டு வீச்சு விமானங்கள், புக்காராவிமானங்கள் எம். ஐ. 8ரகவிமானங்கள் ஆகியவற்றின் கொள்வனவிலும் ஊழல்கள் நிகழ்ந்துள்ளதாகக் கூறப்படுகிறது.

### செயலகம்

கோண்டாவிலில் அமைந்துள்ள பிரயாண அனுமதி வழங்கும் விசாரணைச் செயலகத்திற்கு அண்மையில் (புகையிரத நிலைய வீதி கோண்டாவில்) இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது என்பதினை போக்குவரத்து கண்காணிப்புப் பிரிவு பொதுமக்களுக்கு அறியத்தருகின்றது.

### கடுகதி

படையினரின் வாகனங்கள் பாதுகாப்பிற்கு செல்வது இங்கு குறிப்பிடத்தக்கது எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேசமயம் கொழும்பில் தமிழ் இளைஞர்கள் தொடர்ந்து கைது செய்யப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. ஹோட்டல்களையும் விடுதிகளையும் பொலிசார் முற்றுகையிட்டு சோதனையிடுவது பொலிசாரின் வழமையானதோர் கடமையாகி விட்டதாக வெளிநாட்டவர் ஒருவர் தெரிவித்தார்.

கொழும்பில் இதுவரை எத்தனை தமிழர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என்ற தகவல் இன்னும் பொலிசாரால் தெரிவிக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது

### துணை

மத்திய அரசுக்கு எதிராக ஆர்ப்பாட்டம் நடத்துவதே முதலமைச்சர் உண்ணாவிரதத்தின் உள்நோக்கம் என்றும் மத்திய அரசு அலுவலகங்கள் அ.தி.மு.கவினர் தாக்கியிருப் [illegible]

## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

20-07-93

ஆனால், தனது சரிந்த 'இமேஜ்'ஜை நிலை நிறுத்துவதற்கு ஜெயலலிதா தெரிவு செய்த விடயமும், நேரமும் மிகவும் முக்கியமானதும், பொருத்தமானதும் ஆகும். தமிழர்களைப் பொறுத்து தற்பொழுது பெரும் தண்ணீர்த் தட்டுப்பாடு நிலவும் காலகட்டமாகும். குடிநீருக்கே மக்கள் ஆலாய்ப் பறக்கும் இவ்வேளையில், தமிழகத்திற்கு வழங்கப்பட வேண்டிய தண்ணீரைத் 'தா' எனக் கோரி முதலமைச்சர் ஒருவர் உண்ணாவிரதம் இருப்பது நியாயமானதும் அர்த்தம் உள்ளதும் என்றே மக்கள் நம்புவர். இதனை அரசியல் ஸ்ரண்ட் என முற்றுமுழுதாகத் தூக்கி எறிந்துவிட மாட்டார்கள்.

அடுத்ததாக, காவிரி நீர்ப் பிரச்சினையைப் பெரும் சர்ச்சைக்குரியதாக்கி, அதன்மூலம் அரசியல் லாபம் தேடும் முயற்சியில் தமிழக காங்கிரஸ் கட்சித் தலைவர் வாழப்பாடி இராமமூர்த்தி நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்த வேளையில், திடீரென அப்பிரச்சினையில் தலையிட்டு, பிரச்சினையை ஜெயலலிதா தனதாக்கிக் கொண்டார். இதன் மூலம் ஒரு மக்கள் பிரச்சினையை தனது கட்சியே வழிநடத்துவதாகவும் காட்டிக் கொண்டுள்ளார்.

மேலும், 'பங்குச்சந்தை மோசடி புகழ்' ஹர்ஷத் மேத்தாவிடம் ஒரு கோடி ரூபா அன்பளிப்பாக பிரதம மந்திரி நரசிம்மராவ் பெற்றார் என்ற குற்றச்சாட்டு தொடர்பாக நம்பிக்கையில்லாப் பிரேரணை ஒன்று பாராளுமன்றத்தில் விவாதிக்கப்படவுள்ள வேளையில், ஜெயலலிதா தொடங்கியுள்ள போராட்டமானது மத்திய அரசாங்கத்தைப் பொறுத்து பெரும் நெருக்கடியைத் தோற்றுவிக்கக் கூடியதாகவும் உள்ளது.

ஏனெனில், ஜெயலலிதா கோரும் தண்ணீரை வழங்கினால் - காவிரியில் நீர் இல்லை என கன்னட அரசு கூறுகின்றது - ஜெயலலிதா அதனைப் போராடிப் பெற்ற வெற்றியாக கொண்டாடி சரிந்த அரசியல் செல்வாக்கை நிலை நாட்டுவார். நீரை வழங்காது, ஜெயலலிதாவின் உண்ணாவிரதத்தால் உருவாகும் வன்முறையைச் சாட்டாக வைத்து தமிழக அரசைக் கலைத்தாலும், ஜெயலலிதா மீண்டும் 'ஹீரோயின்'வாகி விடுவார். அதாவது மக்களுக்காக பதவி இழந்த முதல்வர் ஆகிவிடுவார். அதேவேளை, மத்தியில் நம்பிக்கையில்லாப் பிரேரணையில் நரசிம்மராவிற்கு எதிராக வாக்களித்து சங்கடத்தை உண்டுபண்ணவும் முடியும்.

இந் நிலையில் காவிரிநீர் பிரச்சினையை குறித்த ஜெயலலிதாவின் உண்ணாவிரத 'ஸ்ரண்ட்' அவரைப் பொறுத்து பெரும் அரசியல் லாபம் நிறைந்தது. இந்திரா காங்கிரசைப் பொறுத்து தமிழகத்திலும், மத்தியிலும் தொல்லை கொடுப்பதாகவும், அவர்களின் எதிர்பார்க்கைக்கு எதிரான விளைவுகளை ஏற்படுத்தி விடக்கூடியதும் ஆகும். ஆனால் இவை யாவற்றையும் முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா எவ்வாறு உண்ணாவிரதத்தை முடித்து வைக்கப்போகிறார் என்பதே தீர்மானிக்கும்.

## பிரசவத்தின் போது சிசு மரணம் அதிகரிப்பு

உலகில் இன்று ஒவ்வொரு வினாடியிலும், ஒரு கர்ப்பிணித் தாய் குழந்தைப் பிரசவத்தின் போது இறந்து கொண்டிருக்கின்றார். இவ்வாறு இரத்தினபுரி மாநகர மண்டபத்தில் நடைபெற்ற கர்ப்பிணித் தாய்மாரின் மாதர் நோய் மற்றும் மகப்பேறு தொடர்பான இரு நாள் சுகாதாரக் கருத்தரங்கில் கலந்துகொண்டு பேசிய சிங்கப்பூரைச் சேர்ந்த ஆசிய பசுபிக் பிராந்திய மாதர் நோய் மகப்பேற்று வைத்திய நிபுணர் சங்கத்தின் பொதுச் செயலாளரான பேராசிரியர் எஸ் எஸ் ரட்ணம் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் கூறுகையில், 1985-ம் வருடத்தில் மட்டும் உலகில் ஐந்து லட்சம் தாய்மார்கள் பிரசவத்தின் போது இறந்துள்ளனர். இத்தொகை வர வர அதிகரித்துக் கொண்டே செல்கின்றது. தற்போது வருடாந்தம் ஐந்து லட்சத்து அறுபதாயிரம் தாய்மார்கள் பிரசவிக்கும் போது மரணத்தை தழுவ நேர்கின்றது. ஆனால் இவை பெரும்பாலும் தவிர்க்கக் கூடியவையாகும் என்றும் தெரிவித்தார்.

### விளையாட்டுப்போட்டி

திருநெல்வேலி செல்லக்கிளி அம்மான் படிப்பகத்தின் வருடாந்த விளையாட்டுப் போட்டியும், வாலையம்மன் விளையாட்டுக் கழகத்தினரின் கிரிக்கட் போட்டியின் பரிசளிப்பு விழாவும் இன்று பிற்பகல் 2.00 மணியளவில் நிலைய முன்றலில் நடைபெறும்

### தேசிய

த்தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா.

ஐலண்ட் பத்திரிகைக்கு அவர் அளித்த பேட்டி ஒன்றிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அனுரா பண்டார நாயக்காவை ஏன் கட்சியிலிருந்து நீக்கினீர்கள் என்று கேட்கப்பட்டபோது '' கட்சியில் அனுரா நடந்த விதமே அவரை வெளியேற்ற வேண்டிய நிலைக்கு என்னை கொண்டு வந்தது. கட்சியின் யாப்பின்படி ஒழுங்காற்று நடவடிக்கையின்படி அவர் கட்சியிலிருந்து வெளியேற்றப் பட்டார் என சிறிமாவோ பதிலளித்தார்.

அனுரா எனது மகனாக இருந்தாலும் அவர்கட்சி உறுப்பினர். அவரை நீக்கியதற்கு எதிராக அவரின் ஆதரவாளர்கள் எமக்கு எதிராக செயற்படுகின்றனர். அவர்கள் தாம் கட்சி ஒழுங்கை மீறுவதை கவனத்தில் கொள்ளவேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

அனுரா பண்டார நாயக்கா நீங்கள் அவரை கட்சியிலிருந்து நீக்கியதற்கு எதிராகவும் 1959 இல் நீங்கள் மேற்கொண்ட நடவடிக்கைகள் தொடர்பாகவும் குற்றப் பத்திரிகை ஒன்றை தயாரித்து வருவதாக கூறியுள்ளாரே என்று கேட்ட போது அதற்கு பதிலளித்த திருமதி பண்டாரநாயக்கா பொறுத்திருந்து பார்ப்போம் அதுபற்றி இப்போது கருத்து கூற விரும்பவில்லை என பதிலளித்தார்.

கோள் விடுத்தார்.

அத்துடன் மக்களுக்கு ஏற்பட்டுள்ள இடையூறுகள் தொடர்பாக தான் வருந்துவதாகவும், இத்தகைய இடையூறுகள் ஏற்படாமல் பார்த்துக்கொள்ளவேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

கொள்வனவு செய்யப்பட்ட சுப்பர்சொனிக் குண்டு வீச்சு விமானங்கள், புக்காரா விமானங்கள் எம். ஐ. 8 ரக விமானங்கள் ஆகியவற்றின் கொள்வனவிலும் ஊழல்கள் நிகழ்ந்துள்ளதாகக் கூறப்படுகிறது.

கொழும்பில் இதுவரை எத்தனை தமிழர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என்ற தகவல் இன்னும் பொலிசாரால் தெரிவிக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது

### துணை

மத்திய அரசுக்கு எதிராக ஆர்ப்பாட்டம் நடத்து வதே முதலமைச்சர் உண்ணாவிரதத்தின் உள்நோக்கம் என்றும் மத்திய அரசு அலுவலகங்களை அ.தி.மு.கவினர் தாக்கியிருப்பது இந்த அரசியல் உள்நோக்கத்தையே காட்டுவதாகவும் அவர் கூறினார்.

இதேவேளை ஜெயலலிதாவின் உண்ணாவிரதத்தை தொடர்ந்து தமிழகத்தில் வெடித்த வன்செயல்களினால் மத்திய அரசிற்கு சொந்தமான 100கோடி ரூபா பெறுமதியான சொத்துக்கள் அ.தி.மு.க வினரால் சேதமாக்கப்பட்டுள்ளது என தெரிவிக்கப்படுகிறது.

## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

**20-07-93**

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்: 10583

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்:

24-4465, 24-4108, 28-8589, 28 6748, 24-2860
26-2737, 26-0536, 27-4070, 28-8037, 26-4951
26-6579, 26-6075, 43-3854, 41-8626, 24-6646

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:

41-9876, 26-6029, 22-6163, 27-8999, 26-8051
27-6887, 26-3130, 26-9992, 41-9659, 26-4443
27-6524, 28-0854, 24-9758, 26-9703, 41-9396.

## சந்தை விலை விபரம் (19-07-1993)

### யாழ். மாவட்ட சராசரி சில்லறை விலைகள்

| தொ. இல. | பொருள்கள் | அலகு | திருநெல்வேலி | பெரிய கடை | சுன்னாகம் | அச்சுவேலி | சங்காணை | நெல்லியடி | பருத்தித்துறை | கொடிகாமம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. |
| 01. | குத்தரிசி | கி.கி | 32.00 | — | — | 26.00 | ★ | 29.50 | — | ★ |
| 02. | கோதுமை மா | '' | — | — | — | 14.00 | | — | — | |
| 03. | சீனி | '' | — | — | — | 28.00 | | 38.00 | — | |
| 04. | கத்தரி | '' | 19.50 | 28.50 | 17.00 | 27.00 | | 20.00 | 22.50 | |
| 05. | வெண்டி | '' | 30.50 | 35.50 | 27.00 | 40.50 | | 40.00 | 38.50 | |
| 06. | பாகல் | '' | 35.50 | 36.50 | 37.50 | 120.00 | | 46.50 | 42.00 | |
| 07. | புடோல் | '' | 13.50 | 18.50 | 17.00 | 26.00 | | 20.00 | 20.50 | |
| 08. | பயற்றங்காய் | '' | 49.00 | 50.00 | 41.50 | 51.50 | | 33.50 | 45.00 | |
| 09. | தக்காளி | '' | — | — | — | 75.00 | | — | — | |
| 10. | வாழைக்காய் | '' | 42.50 | 39.50 | 38.00 | 56.00 | | 43.00 | 43.50 | |
| 11. | பீற்றூட் | '' | 28.00 | 41.50 | 24.50 | 50.00 | | 30.00 | 24.50 | |
| 12. | தேங்காய் | ஒன்று | 12.50 | 14.00 | 13.50 | 14.50 | | 12.50 | 13.00 | |
| 13. | பச்சைமிளகாய் | கி.கி | 96.50 | 101.50 | 96.50 | 116.50 | | 93.50 | 86.50 | |
| 14. | எலுமிச்சை | '' | 103.00 | 96.50 | 96.50 | 116.50 | | 100.00 | 90.00 | |
| 15. | வெங்காயம் | '' | 11.50 | 16.00 | 11.50 | 16.00 | | 17.00 | 16.00 | |
| 16. | கப்பல் வாழைப்பழம் | '' | 42.50 | 45.50 | 48.50 | 49.00 | | 55.00 | 40.00 | |
| 17. | இறால் | '' | 120.00 | 125.00 | 56.50 | 95.00 | | — | 40.00 | |
| 18. | பெரிய மீன் | '' | 200.00 | 165.00 | 120.00 | 180.00 | | — | 175.00 | |
| 19. | சிறிய மீன் | '' | 150.00 | 80.00 | 60.00 | 100.00 | | — | 75.00 | |
| 20. | முட்டை | ஒன்று | 08.00 | 08.50 | — | 08.50 | ★ | — | 08.50 | ★ |

தகவல்:- தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகம்

★ தரவு கிடைக்கவில்லை

## 2-ம் ஆண்டு நினைவஞ்சலி



தாயின் மடியில்

16-02-1975

தாயக மண்ணில்

21-07-1991

### கப்டன் பில்லா

**கிருஷ்ணபிள்ளை சிவஞானம் [சிவா]**

(வேம்படிறோட்-உடுத்துறை)

ஓ..பில்லா நீ வீரத்துடன் போராடும் வேளையில்
எதிரியின் குண்டு உன்மார்பினை துளைத்ததே
மகிழ்வுடன் சாவினை அணைத்தாய் மண்ணிற்காய்
உன் ஆயுதங்களும் சீருடைகளும் உன்தம்பியும்
தங்கையும் ஏந்தினர்
ஓ மாவீரனே உன் உடல்தான் எரிந்து போனது
உணர்வுகள் எரியவில்லை
இலட்சிய உறுதியோடு வீழ்ந்தவர்கள் நீங்கள்
நிச்சயம் தமிழீழம் பெறுவது உறுதி.

21-07-1991 அன்று இவருடன் வீரச்சாவு அடைந்த போராளிகளுக்கும் எமது அஞ்சலியை செலுத்துகின்றோம்.

அத்துடன் 21-07-1993 இன்று நடைபெறும் 2-ம் ஆண்டு நினைவு வைபவத்தில் சகபோராளிகள், நண்பர்கள், பொதுமக்கள், உறவினர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அழைக்கின்றோம்.

தம்பசிட்டி,
பருத்தித்துறை. (சி-7044) -குடும்பத்தினர்.

---

ஐஸ்கிறீம் தயாரிப்பாளர்களுக்கான

### கலந்துரையாடல்

யாழ். மாவட்டத்திலுள்ள சகல ஐஸ்கிறீம் தயாரிப்பாளர்களுக்கான கலந்துரையாடல் ஒன்று இல. 230, இராமநாதன் வீதியில் (யாழ்.பல்கலைக் கழகத்திற்கு முன்பாக) அமைந்துள்ள தொழிற்றுறை மேம்பாட்டு நிறுவனத்தில் 23-07-93 வெள்ளிக்கிழமை பி. ப. 3 30 மணிக்கு நடைபெறவுள்ளது. இக்கலந்துரையாடலில் ஐஸ்கிறீம் தயாரித்தல் சம்பந்தமான முக்கிய விடயங்கள் ஆராயப்பட உள்ளதால் அனைத்து ஐஸ்கிறீம் தயாரிப்பாளர்களும் தவறாது பங்குபற்றுமாறு வேண்டப்படுகின்றார்கள்.

-தொழிற்றுறை மேம்பாட்டு நிறுவனம்

(சி/7049)

---

## முதியோர் இல்லம்

---

## நிவாரணப் பொருள்கள் போதியளவு இல்லை

(யாழ்ப்பாணம்)

யாழ். கச்சேரி புனர்வாழ்வுப் பகுதியால் இடம் பெயர்ந்த மக்களுக்கு வழங்கப்படும் ஆனி மாத நான்கு கட்ட உலர் உணவு நிவாரணத்திற்கு தேவையான பால்மா வகைகளில் 50 வீத மானவையே கச்சேரியால் சங்கங்களுக்கு வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. இதனால் இடம் பெயர்ந்த மக்களுக்கு நிவாரண விநியோகத்தை மேற்கொள்ளும் சங்கங்கள் தற்பொழுது பால்மா முடிவடைந்துள்ளதால் தமது மக்களுக்கு பங்கீட்டு அட்டவணைப் படி நிவாரணத்தை வழங்க முடியாமல் உள்ளதாக நிவாரண விநியோகத்தை மேற்கொள்ளும் சங்கங்கள் தெரிவிக்கின்றன. (88)

## மக்களை, நாட்டைக்காக்கவே அநுரா இடைநிறுத்தம்

மக்களையும, நாட்டையும் காப்பாற்றவே அநுர பண்டாரநாயக்க கட்சியிலிருந்து நீக்கப்பட்டிருப்பதாக சுதந்திரக்கட்சித் தலைவியும், அவரது தாயாருமான திருமதி சிறிமாவோ தெரிவித்துள்ளார். அநுரா பண்டாரநாயக்கவிற்கு அவர் கடந்த வியாழனன்று எழுதியுள்ள ஒரு கடிதத்தில் அவர் கட்சியிலிருந்து நீக்கப்பட்டதாக அறிவித்திருந்தது தெரிந்ததே.

கட்சியின் அமைப்பு விதிகளின் பிரிவு 14 (7)ன்படி தான் செயற்படுவதாகக் குறிப்பிட்டிருக்கும் திருமதி சிறிமாவோ, அநுரா பண்டாரநாயக்க கட்சியின் தலைமையை விமர்சிக்கும் விதமாக அளித்த பத்திரிகைப் பேட்டி பற்றி கட்சியின் செயலாளருக்கு விளக்கமளிக்க தவறிவிட்டார் என்றும் சுட்டிக்காட்டியுள்ளார்.

---

## 2-ம் ஆண்டு நினைவஞ்சலி



தாயின் மடியில்

12-03-1973

ௐ

தாயக மண்ணில்

21-07-1991

### வீரவேங்கை வரன்

### (சரவணமுத்து ரவிச்சந்திரன்)

கட்டைக்காட்டில் ஸ்ரீலங்கா இராணுவத்தினருடனான நேரடி மோதலில் வீரச்சாவெய்தினார்.

தமிழ்த்தாய் மடிதனில் அன்று நீ வளர்ந்தாய் பின்பு எம்
தலைவனின் பாசறை தேடி விரைந்தாய்
எம் இனத்தை அழிக்கின்ற எதிரியை
பல களங்களில் வெற்றி கண்டாய்
கட்டைக்காட்டுச் சமரில் வீரச்சாவைத் தழுவினாய்
இன்று உமைப் பிரிந்து இரண்டு ஆண்டுகள்
ஆகின்றதையா உன் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அன்பு

---

## யுனிசெவ் அன்பளிப்பு

யுனிசெவ் நிறுவனம் யாழ். மாவட்ட ஆரம்பப்பாடசாலை மாணவர்களுக்கு ஒரு தொகுதி பாடசாலை உபகரணங்களை அன்பளிப்புச் செய்துள்ளது.

மேற்படி பாடசாலை உபகரணங்கள் திருக்கோணமலையில் இருந்து 'நரோமா' என்கின்ற கப்பலில் நேற்று காங்கேசன்துறைக்கு எடுத்துவரப்பட்டு பின்னர் 'குமாரி' கப்பல் மூலம் பருத்தித்துறைக்கு எடுத்துவரப்பட்டு யாழ். கல்வித்திணைக்களம் கொண்டு வரப்பட்டது.

மேலும் அன்பளிப்புச் செய்யப்படும் ஒரு பொதியினுள் இரண்டு அப்பியாசக் கொப்பிகள் ஒரு பேனை ஒரு பென்சில் மற்றும் ஒரு அளவுகருவியும் அடங்குகின்றது. (பா)

### அதிபர்களுக்கான சந்திப்பு

கல்வி அபிவிருத்திக் கழக நிதிப் பயன்பாடு பற்றியும் நிதிநிர்வாக ஒழுங்குபடுத்தல் பற்றியும் நடவடிக்கை மேற்கொள்ளவிருப்பதால் சகல அதிபர்களும் கல்விக் கோட்ட அடிப்படையில் தவறாது கலந்து கொள்ளும்படி பிரதிக் கல்விப்பணிப்பாளர்கள் கேட்டுள்ளனர். பண்டத்தரிப்புக் கல்விக் கோட்ட அதிபர்கள் நாளை வியாழக்கிழமை மு.ப. 9 00 மணிக்கு கல்விக் கோட்ட அலுவலகத்திற்கும் யாழ். கல்விக்கோட்ட அதிபர்கள் நாளை வியாழக்கிழமை மு.ப.11 00மணிக்குயாழ். இந்துமகளிர் கல்லூரிக்கும் மருதனார்மடக் கல்விக் கோட்ட அதிபர்கள் நாளை வியாழக்கிழமை பி.ப 2 30 மணிக்கு யாழ் / இராமநாதன் கல்லூரிக்கும், வேலணைக் கல்விக் கோட்ட அதிபர்கள் வரும் வெள்ளிக்கிழமை மு ப 10.00 மணிக்கு சென்ஜோன்ஸ் அக்கடமிக்கும், வடமராட்சிக் கல்விக் கோட்ட அதிபர்கள் வரும் வெள்ளிக்கிழமை பி. ப. 2. 30 மணிக்கு யாழ் / வேலாயுதம் மகாவித்தியாலயத்திற்கும் தென்மராட்சிக் கல்விக் கோட்ட அதிபர்கள் வரும் திங்கட்கிழமை பி. ப. 2. 30 மணிக்கு யாழ் / றிபேக் கல்லூரிக்கும் வருகை தரும்படி வேண்டப்படுகின்றனர்.

---

### கஷ்டப் பிரதேச

இருப்பதாக தெரிவித்தனர்.

இதற்கு பதிலளித்த பாஸ்கரலிங்கம் இந்த வெற்றிடங்களை நிரப்புமாறு கல்விச் சேவைக் குழுவுக்கு அறிவித்தால் அது நடைமுறைப்படுத்தப்பட நீண்டகாலம் எடுக்கும். எனவே உடனடியாக நியமனம் வழங்குவதற்காக வெற்றிடம் உள்ள பகுதிகளில் வசிக்கும் தகுதியானவர்களின் பட்டியலை அரசாங்க அதிபர்கள்

---

## மரண அறிவித்தல்

**சரவணமுத்து சிவபெருமான் [சாமியார்]**

ஓய்வு பெற்ற புகையிரத அதிபர் [மல்லாகம்]

வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், நாகம்மாவின் அன்புக் கணவரும், மருள்நீக்கியார் நதிவீரகுலரத்தினம், பிறேமாவதி சிவசோதிநாதன், நேசமலர் சிவனேசன், இராசமலர் தவரட்ணசிங்கம், இந்துமதி தியாகரர்சா, சிவராசா [கனடா], ஜெயதேவி தர்மநாதன், ஜெயவீரரர்சா [நோர்வே] ஆகியோரின் அன்புத் தந்தையாருமான சரவணமுத்து சிவபெருமான் 20-07-93 செவ்வாய்க்கிழமை பிற்பகல் 5 00 மணிக்கு காலமானார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று [21-07-93] புதன்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு வட்டுக்கோட்டையில் உள்ள அன்னாரதுஇல்லத்தில் நடைபெற்று பூதவுடல் வழுக்கையாற்று மயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும் என்பதை அறியத்தருகின்றோம்.

சிவன்கோவிலடி,
வட்டுக்கிழக்கு,
வட்டுக்கோட்டை. [5435]

தகவல்:
நாகம்மா [மனைவி]
பிள்ளைகள், மருமக்கள்

---

## 2ஆம் ஆண்டு நினைவு



### வீரவேங்கை றெஜி

(பற்குணராசா செந்தூரன்)

தாயின் மடியில் : 25-02-1977

தாயக மண்ணில் : 21-07-1991

மண்ணின் விடியலை மனதிலே பதித்து
வீரனாய் களத்திலே குதித்த - றெஜியே!
விடுதலைக் கொள்கைய ய் துப்பாககி ஏந்தி
புல்லாவெளி மண்ணிலே எதிரி படையை அழித்து
அந்த மண்ணிலேயே மாவீரனாகி வரலாறு படைத்தாய்
ஈழமண்ணிற்காய் இன்னுயிரை ஈந்த
இந் நாளில் உன்னை நினைவுகூருகின்றோம்.

21-07-91 இல் புல்லாவெளியில்
இவருடன் வீரச்சாவடைந்த
அனைத்துப் போராளிகளுக்கும் எமது அஞ்சலிகள்.

இல. 230, இராமநாதன் வீதியில் (யாழ்.பல்கலைக் கழகத்திற்கு முன்பாக) அமைந்துள்ள தொழிற் றுறை மேம்பாட்டு நிறுவனத்தில் 23-07-93 வெள் ளிக்கிழமை பி. ப. 3.30 மணிக்கு நடைபெறவுள் ளது. இக்கலந்துரையாடலில் ஐஸ்கிறீம் தயாரித்தல் சம்பந்தமான முக்கிய விடயங்கள் ஆராயப்பட உள்ளதால் அனைத்து ஐஸ்கிறீம் தயாரிப்பாளர் களும் தவறாது பங்குபற்றுமாறு வேண்டப்படுகின் றார்கள்.

-தொழிற்றுறை மேம்பாட்டு நிறுவனம்

(சி/7049)

# முதியோர் இல்லம்

இளம் வயதில் சுறுசுறுப்பாக பணியாற்றி .... வயது முதிர்ந்த வேளையில் எவரது உதவியுமின்றி தனிமையில் தவிக்கின்றீர்களா?

உங்களுக்காக அமைதியான சூழலில்
புத்தூர் வைத்திய சாலைக்கு அருகாமையில்

**முதியோர் இல்லமொன்றை ஆரம்பிக்கின்றோம்**

பெயர், விலாசம், வயது, தங்களால் மாதாந்தம் கொடுக்கக்கூடிய தொகை ஆகியவற்றை குறிப் பிட்டு 30-07-93க்கு பிந்தாமல் விண்ணப்பியுங்கள். தனியானவர்களும், தம்பதிகளும் விண்ணப்பிக் கலாம்.

**மெதடிஸ்த திருச்சபை**
**புனர்வாழ்வுப் பகுதி**

சி. எல். எஸ். புத்தகசாலை,
570, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

(5430)

**யாழ் நகர் ஸ்ரீதர் திரையரங்கில்**

(கரும்புலிகள் நினைவாக)
போராளிக் கலைஞர்கள் ஒருங்கிணைந்து
விடுதலைப் புலிகள் கலைபண்பாட்டுக் கழகம்
தயாரித்து வழங்கும்

## "தாயகக் கனவு"

தினசரி மாலை 4.00 மணி, 6.00 மணி
சனி, ஞாயிறு தினங்களில்
காலை 10.30 மணி,
மாலை 4.00 மணி, 6.00 மணி

[சி6959]

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 31ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1993-ம் ஆண்டு ஜூலை மாதம் 21-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

**(சரவணமுத்து ரவிச்சந்திரன்)**

கட்டைக்காட்டில் ஸ்ரீலங்கா இராணுவத்தின ருடனான நேரடி மோதலில் வீரச்சாவெய்தினார்.

தமிழ்த்தாய் மடிதனில் அன்று நீ வளர்ந்தாய் பின்பு எம்
தலைவனின் பாசறை தேடி விரைந்தாய்
எம் இனத்தை அழிக்கின்ற எதிரியை
பல களங்களில் வெற்றி கண்டாய்
கட்டைக்காட்டுச் சமரில் வீரச்சாவைத் தழுவினாய்
இன்று உமைப் பிரிந்து இரண்டு ஆண்டுகள்
ஆகின்றதையா உன் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அன்பு
அம்மா, அண்ணா,
அக்காமார், தம்பிமார்.

42, மானிப்பாய் வீதி,
கோணாந்தோட்டம்,
யாழ்ப்பாணம்.

(5431)

தென்மராட்சிக் கல்விக் கோட்ட அதிபர்கள் வரும் திங் கட்கிழமை பி. ப. 2.30 மணி க்கு யாழ் / றிபேக் கல்லூரிக் கும் வருகை தரும்படி வேண் டப்படுகின்றனர்.

**கஷ்டப் பிரதேச**

இருப்பதாக தெரிவித்தனர்.

இதற்கு பதிலளித்த பாஸ்கர லிங்கம் இந்த வெற்றிடங்களை நிரப்புமாறு கல்விச் சேவைக் குழுவுக்கு அறிவித்தால் அது நடைமுறைப்படுத்தப்பட நீண்டகாலம் எடுக்கும். எனவே உடனடியாக நியமனம் வழங்குவதற்காக வெற்றிடம் உள்ள பகுதிகளில் வசிக்கும் தகுதியானவர்களின் பட்டி யலை அரசாங்க அதிபர்கள் அனுப்பி வைத்தால் அதற் கான அனுமதியை நான் அமைச்சரவையிடம் பெற்றுத் தருவேன் என்றார்.

(பற்குணராசா செந்தூரன்)

| தாயின் மடியில் : | தாயக மண்ணில் : |
|---|---|
| 25-02-1977 | 21-07-1991 |

மண்ணின் விடியலை மனதிலே பதித்து
வீரனாய் களத்திலே குதித்த - றெஜியே!
விடுதலைக் கொள்கையாய் துப்பாக்கி ஏந்தி
புல்லாவெளி மண்ணிலே எதிரி படையை அழித்து
அந்த மண்ணிலேயே மாவீரனாகி வரலாறு படைத்தாய்
ஈழமண்ணிற்காய் இன்னுயிரை ஈந்த
இந் நாளில் உன்னை நினைவுகூருகின்றோம்.

21-07-91 இல் புல்லாவெளியில்
இவருடன் வீரச்சாவடைந்த
அனைத்துப் போராளிகளுக்கும் எமது அஞ்சலிகள்.

றெஜீ வீதி,
மானிப்பாய்.

பாசமுள்ள தாய்,
சகோதரர்கள்

(5432)

# 2-ம் ஆண்டு நினைவஞ்சலி



**மேஜர் சேரன்**
[சண்முகம் றோய் செழியன்]
நாகம, பண்டாரவளை
பிறப்பு: 16-11-1969
வீரச்சாவு: 21 07-1991



**மேஜர் லவன்**
[துரைசிங்கம் ராஜ்சங்கர்]
கொழும்பு
பிறப்பு: 21-04-1968
வீரச்சாவு: 14-07-1991

தாயகம் மீட்டிடும் காவியத் தலைவனின்
தானையில் வேங்கையாய் தாவிய வீரரே!
எல்லையை மீறிய எதிரியை வீழ்த்திட
எரிமலையாகியே எழுந்த நம் வீரரே!
விடுதலை! விடுதலை! விடுதலை! என்றுமே
வீசிடும் காற்றுடன் வீசிய வீரரே!
களத்தினில் ஆடியே காவியமானீர்
கண்களில் ஆடியெம் நெஞ்சினில் வாழ்வீர்!!

என்றும் உங்கள் நினைவுகளுடன் வாழும்
சின்னராஜா குடும்பத்தினர்.

இத்தியடி பிள்ளையார் கோயில் வீதி,
சங்கத்தானை,
சாவகச்சேரி.

[5429]

# 2-ம் ஆண்டு நினைவலைகள்



## மேஜர் கோணேஷ்

(மார்க்கண்டு தாமோதரம்பிள்ளை)

பிறப்பு: 16-05 1970 வீரச்சாவு: 21-07-1991

உன் நினைவுகள்
எங்கள் இதயத்தில் உரமானது-எம்
வீரமுடன் தோழமை உறவானது
பாசமான நண்பனே-பறந்து போயினீர்
பண்புடனே உந்தன் நினைவை
என்றும் இசைந்து பாடுவோம்.

(5434) —நண்பர்கள்